**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், வேதாரண்யம்.**

**முன்னிலை: திருமதி. G.சுதா, B.Sc., B.L.,**

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர்,
வேதாரண்யம்.

2026 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 11 ஆம் நாள் வியாழக்கிழமை

திருவள்ளுவர் ஆண்டு 2058 ஸ்ரீ பராபவ வருடம் வைகாசி மாதம் 28-ஆம் நாள்

**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.39/2024**

CNR. No: TNNG05- 000390-2024

| | | |
|---|---|---|
| 1. | குற்றமுறையீட்டாளர் பெயர் | அரசுக்காக:<br>காவல் ஆய்வாளர்,<br>தலைஞாயிறு காவல் நிலையம்.<br>குற்ற எண். 14/2024. |
| 2. | எதிரி | ஜெரால்டு, வயது 43/2024,<br>த/பெ. தேவதாஸ்,<br>கொத்தங்குடி, மாராச்சேரி, திருக்குவளை(T.K) |
| 3. | எதிரி கைது செய்யப்பட்ட நாள் | எதிரி கடந்த 15.01.2024 ம் தேதி கைது செய்யப்பட்டுள்ளார். |
| 4. | எதிரி பிணையில் விடுவிக்கப்பட்ட நாள் | எதிரி இந்நீதிமன்ற Crl.M.P.No. 30/2024, நாள்:22.01.2024 ம் தேதி வழங்கப்பட்ட பிணை உத்தரவு படி கடந்த 23.01.2024-ஆம் தேதி பிணையில் சென்றுள்ளார். |
| 5. | இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்ட நாள் | 15.02.2024-ஆம் தேதி இந்நீதிமன்றத்தில் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டு, 28.02.2024-ஆம் தேதி CC.No.39/2024-ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டது. |

SUDHA GANESAN

Digitally signed by SUDHA GANESAN
Date: 2026.06.11 16:04:22 +0530

| | | |
|---|---|---|
| 6. | கு.வி.மு.ச.பிரிவு 281-ன் கீழ் வனையப்பட்ட குற்றச்சாட்டுகள் குறித்து எதிரிகளிடம் கேட்கப்பட்ட நாள் | 20.05.2026 |
| 7. | வனையப்பட்ட குற்றச்சாட்டுகள் | எதிரியின் மீது இ.த.ச. பிரிவுகள் 294(b), 324, 506(ii) கீழ். |
| 8. | எதிரியின் கோரிக்கை | பொய் வழக்கு, குற்றவாளி இல்லை. |
| 9. | இவ்வழக்கில் கு.வி.மு.ச. பிரிவு 317 ன் கீழான மனுக்கள் நீங்கலாக இதர தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் மற்றும் அவைகள் மீதான உத்தரவு, அது சம்பந்தான மேல் முறையீட்டு உத்தரவு | எதிரி தரப்பில் கடந்த 01.06.2026-ஆம் தேதி இவ்வழக்கின் உபய தரப்பினர்கள் சமரசமான முறையில் பேசி தீர்த்துகொண்டுவிட்டனர் என்றும், மேல் நடவடிக்கை தேவையில்லை என்று கருதுவதாக கூறி கு.வி.மு.ச. பிரிவு 320-இன் கீழ் தாக்கல் செய்த மனுவானது அன்றே இந்நீதிமன்றத்தால் எதிரி மீது சுமத்தப்பட்ட இ.த.ச.பிரிவு 294(b) ன் கீழான குற்றமானது சமரசம் செய்ய முடியாத குற்றம் எனக் கூறி தள்ளுபடி செய்யப்பட்டது. |
| 10. | இவ்வழக்கில் விசாரணை செய்யப்பட்ட சாட்சிகளின் நாள் விபரம் | |

| அரசு தரப்பு/ எதிரி தரப்பு சாட்சிகள் | முதல் விசாரணை நாள் | குறுக்கு விசாரணை நாள் |
|---|---|---|
| அ.சா.1 | 01.06.2026 | 01.06.2026 |
| அ.சா.2 | 01.06.2026 | 01.06.2026 |
| அ.சா.3 | 01.06.2026 | 01.06.2026 |
| அ.சா.4 | 09.06.2026 | 09.06.2026 |

| | | |
|---|---|---|
| 11. | நீதிமன்றத்தின் முடிவு | முடிவில், எதிரி இ.த.ச. பிரிவுகள் 294(b), 324, 506(ii)- ன் கீழ் குற்றவாளி இல்லை என தீர்மானிக்கப்பட்டது. |
| 12. | தீர்ப்புரை | முடிவில் எதிரிக்கு எதிரான இ.த.ச. பிரிவுகள் 294(b), 324, 506(ii) - ன் கீழான குற்றச்சாட்டுகளிலிருந்து கு.வி.மு.ச பிரிவு 248(1) ன் கீழ் எதிரியை விடுதலை செய்து இந்நீதிமன்றத்தால் தீர்ப்பளிக்கப்பட்டது. |
| 13. | வழக்கு சொத்து குறித்த உத்தரவு | இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட தடயப்பொருளை மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு அழிக்க உத்தரவிடப்படுகிறது. |

இந்த ஆண்டுப்பட்டிகை வழக்கு 28.02.2024 ம் தேதியன்று இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு, இன்று 11.06.2026 ம் தேதியன்று என் முன்பு இறுதி விசாரணைக்கு வந்தபோது, அரசுத்தரப்பில் கற்றறிந்த அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகியும், எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு. M. மகேஷ் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரைகள் கேட்கப்பட்டு, சாட்சிய, சான்றாவணங்கள் பரிசீலனை செய்தும், இதுநாள்வரை இந்நீதிமன்ற கவனமாக பரிசீலனையில் இருந்துவந்தும், இன்று இந்நீதிமன்றம் வழங்கும் ...

**<u>தீர்ப்புரை</u>**

கடந்த ஒரு வருடத்திற்கு முன்பு சுப்பிரமணியன் என்பவருக்கும் எதிரிக்கும் நடந்த வாய்தகராரை நிகழ்நிலை புகார்தாரர் செந்தில்குமரன் சமாதானம் செய்து

வைத்ததை பிடிக்காமல் எதிரி கடந்த 15.01.2024 ம் தேதி மதியம் 12.45 மணியளவில் முடுக்கு பன்னத்தெரு, நடுத்தெருவில் உள்ள குளத்தின் அருகே நிகழ்நிலை புகார்தாரர் கரும்பை அலசிக்கொண்டு வந்தபோது எதிரி காரில் வந்து நிகழ்நிலை புகார்தாரரை பார்த்து தேவிடியா, குச்சிக்காரி மவனே நீ என்னடா எனக்கு சமாதானம் செய்வது என்று திட்டி, கையில் வைத்திருந்த கத்தியால் நிகழ்நிலை புகார்தாரரின் வயிற்றில் குத்த சென்றபோது அதனை நிகழ்நிலை புகார்தாரர் தடுத்ததால் அது வலது உள்ளங்கை மற்றும் இடதுகை நடுவிரலில் குத்தி சொற்பகாயத்தை ஏற்படுத்தியும் பக்கத்தில் இருந்த சாட்சிகள் ஓடி வருவதை பார்த்த எதிரி நிகழ்நிலை புகார்தாரரை கீழே தள்ளிவிட்டு இன்னைக்கி தப்பிச்சுட்ட என்னைக்கிருந்தாலும் உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று கத்தியை காட்டி கொலை மிரட்டல் விடுத்துள்ளார். எனவே எதிரியின் குற்றச்செய்கையானது இ.த.ச. பிரிவுகள் 294(b), 324, 506(ii)- ன் படி தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளதாக தலைஞாயிறு காவல் நிலைய ஆய்வாளர் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. அரசுத்தரப்பில் தாக்கலான இறுதி அறிக்கை உரிய பரிசீலனைக்கு பிறகு இந்நீதிமன்ற கோப்பிற்கு இ.த.ச. பிரிவுகள் 294(b), 324, 506(ii) -ன் கீழ் எடுக்கப்பட்ட பின்னர், எதிரிக்கு இந்நீதிமன்றத்தில் ஆஜராவதற்கான அழைப்பாணை வழங்கப்பட்டது. எதிரி இந்நீதிமன்றத்தில் முன்னிலையானவுடன், எதிரிக்கு அரசுத் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்காவணங்களின் நகல்கள் அனைத்தும் பிரிவு 207 கு.வி.மு.ச-வின் படி இலவசமாக வழங்கப்பட்டது. எதிரிக்கு போதுமான கால

அவகாசம் கொடுக்கப்பட்ட பின்பு அரசு தரப்பு வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்து, எதிரிக்கு எதிராக இ.த.ச. பிரிவுகள் 294(b), 324, 506(ii)- ன் படி குற்றச்சாட்டுகள் விளக்கி வினவ, பொய் வழக்கு என்றும், தாம் குற்றவாளி இல்லை என்றும் மறுத்துரைத்தார்.

3. அரசு தரப்பு சாட்சிகள் விசாரணைக்கு உத்திரவிடப்பட்டு அரசு தரப்பில் 1 முதல் 4 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, 1 முதல் 10 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிரி தரப்பில் யாதொரு சாட்சியும் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணம் மற்றும் சான்று பொருட்கள் குறியீடு செய்யப்படவில்லை.

**4(1). அரசு தரப்பு சாட்சிகளின் சுருக்கம் :**

இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரிக்கு பதிலாக விசாரிக்கப்பட்ட தலைஞாயிறு காவல் நிலைய உதவி ஆய்வாளர் திரு. ராஜா- அ.சா.4 வழக்கு ஆவணங்களின் அடிப்படையில் தலைமை காவலர் - பட்டியல் சாட்சி.10 திரு. தியாகராஜன் மற்றும் காவல் ஆய்வாளர் - பட்டியல் சாட்சி.11 திரு. ராதாகிருஷ்ணன் என்பவர்களுக்காக கூடுதல் சாட்சியமளித்துள்ளார். தலைஞாயிறு காவல் நிலைய தலைமை காவலர் - பட்டியல் சாட்சி.10 திரு. தியாகராஜன் கடந்த 15.01.2024 ம் தேதி திருத்துறைப்பூண்டி அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த அ.சா.1 யை விசாரித்து புகார் வாக்குமூலம் பெற்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார்.

மேற்படி புகார் வாக்குமூலத்தில் எதிரி அ.சா.1 யை பார்த்து தேவிடியா, குச்சிக்காரி மவனே நீ என்னடா எனக்கு சமாதானம் செய்வது என்று திட்டி, கையில் வைத்திருந்த கத்தியால் அ.சா.1 ன் வயிற்றில் குத்த சென்றபோது அதனை அ.சா.1 தடுத்ததால் அது வலது உள்ளங்கை மற்றும் இடதுகை நடுவிரலில் குத்தி சொற்பகாயத்தை ஏற்படுத்தியும் பக்கத்தில் இருந்த சாட்சிகள் ஓடி வருவதை பார்த்த எதிரி அ.சா.1 யை கீழே தள்ளிவிட்டு இன்னைக்கி தப்பிச்சுட்ட என்னைக்கிருந்தாலும் உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று கத்தியை காட்டி கொலை மிரட்டல் விடுத்துள்ளார் என்று கூறியுள்ளார்.

4(2). அ.சா.1 பிறழ் சாட்சியாகியுள்ளார். அ.சா.1 மூலமாக புகார் வாக்குமூலத்தில் உள்ள அ.சா.1-னின் கையொப்பம் அ.சா.ஆ.1-ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. பின்பு அன்றைய தினமே சம்பவ இடம் சென்று சாட்சிகள் ஆறுமுகம் மற்றும் சுப்பிரமணியன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். பின்பு சம்பவத்திற்கு பயன்படுத்தப்பட்ட வழக்கு தடயப்பொருளை கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து கைப்பற்றியுள்ளார். பின்னர் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 6 வரையிலானவர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். காயம்பட்ட நபருக்கு சிகிச்சையளித்த திருத்துறைப்பூண்டி அரசு மருத்துவமனை மருத்துவர் யோகலெட்சுமி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்பு தனது புலன் விசாரணையை

முடித்து எதிரியின் மீது இ.த.ச. பிரிவுகள் 294(b), 324, 506(ii)-இன் கீழ் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார். அ.சா.4 மூலமாக புகார் வாக்குமூலம், முதல் தகவல் அறிக்கை, பார்வை மகஜர், மாதிரி வரைபடம், கைப்பற்றுதல் மகஜர் , விபத்து பதிவேடு மற்றும் காயச்சான்று ஆகியவை முறையே அ.சா.ஆ.2 முதல் அ.சா.ஆ.10-ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

5. இத்துடன் அரசு தரப்பு சாட்சிய விசாரணை முடித்துக் கொள்ளப்பட்டது. அரசு தரப்பில் முன்னிலைப்படுத்தி விசாரணை செய்யப்பட்ட சாட்சிகளில், இவ்வழக்கு எதிரிக்கு பாதகமாக அளிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்கள் குறித்து, 10.06.2026-ஆம் தேதி பிரிவு 313(1)(b) கு.வி.மு.ச-இன் கீழ் இவ்வழக்கு எதிரியிடம் எடுத்துக்கூறி விளக்கி விசாரணை மேற்கொள்ளப்பட்டது. அப்போது இவ்வழக்கு எதிரி தமக்கு எதிராக கூறப்பட்ட அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியம் பொய் என்றும், வழக்கு குறித்து விசாரணை மேற்கொள்ளப்பட்டபோது பொய் வழக்கு என்றும் மறுத்துரைத்தார். எதிரி தரப்பில் சாட்சிகள் இல்லை என கூறப்பட்டு, சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை.

6. எனவே, எதிரிக்கு எதிராக இ.த.ச. பிரிவுகள் 294(b), 324, 506(ii) - ன் கீழ் சாட்டப்பட்ட குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் சந்தேகங்களுக்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதே தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினையாகும்.

7. இரு தரப்பு வாதம் கேட்கப்பட்டது. அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களும் சான்றாவணங்களும் பரிசீலிக்கப்பட்டது.

8(1). அரசு தரப்பு வழக்கில் எதிரி அ.சா.1 யை பார்த்து தேவிடியா, குச்சிக்காரி மவனே நீ என்னடா எனக்கு சமாதானம் செய்வது என்று திட்டி, கையில் வைத்திருந்த கத்தியால் அ.சா.1 ன் வயிற்றில் குத்த சென்றபோது அதனை அ.சா.1 தடுத்ததால் அது வலது உள்ளங்கை மற்றும் இடதுகை நடுவிரலில் குத்தி சொற்பகாயத்தை ஏற்படுத்தியும் பக்கத்தில் இருந்த சாட்சிகள் ஓடி வருவதை பார்த்த எதிரி அ.சா.1 யை கீழே தள்ளிவிட்டு இன்னைக்கி தப்பிச்சுட்ட என்னைக்கிருந்தாலும் உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று கத்தியை காட்டி கொலை மிரட்டல் விடுத்துள்ளார் என்று கண்டுள்ளது.

8(2). ஆனால் சம்பவத்தில் பாதிக்கப்பட்ட சாட்சியாக விசாரிக்கப்பட்ட அ.சா.1 தனது சாட்சியத்தில் சுமார் 2 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் மதியம் தனது வீட்டிற்கு அருகில் உள்ள குளத்தில் சாமி கும்பிட செல்வதற்காக சென்றபோது யாரோ ஒரு நபர் தன்னிடம் தகராறு செய்து, தகாத வார்த்தைகளில் திட்டி, கத்தியால் குத்த வந்ததாகவும், அப்போது சுதாகரித்துக் கொண்டு தடுத்தபோது தனது கையில் காயம் ஏற்பட்டது என்றும், கத்தியை காட்டி கொலை மிரட்டல் விடுத்தார் என்றும், தனக்கு ஏற்பட்ட காயத்திற்கு தான் மருத்துவமனையில் இருந்தபோது போலீசார் தன்னை விசாரித்தார்கள் என்றும், சில நாட்களுக்கு முன்பு எதிரிக்கும் தனக்கும் வாய் தகராறு

ஏற்பட்டது என்றும், மேற்படி முன் விரோதத்தில் எதிரி தான் தன்னை தாக்கியிருப்பார் என்று சந்தேகத்தின் பேரில் மிகைப்படுத்தி போலீசாரிடம் புகார் வாக்குமூலம் கொடுத்துவிட்டதாகவும், சம்பவ இடத்தில் எதிரியை தான் பார்க்கவில்லை என்றும் அரசு தரப்பு வழக்கிற்கு பாதகமாக சாட்சியளித்துள்ளார்.

8(3). மேலும் சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சியாக அ.சா.2 விசாரிக்கப்பட்டுள்ளார். அ.சா.2 தனது சாட்சியத்தில் வழக்கு சம்பந்தமாக தனக்கு எதுவும் தெரியாது என்றும், போலீசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும் அரசு தரப்பு வழக்கிற்கு முற்றிலும் பாதகமாக சாட்சியளித்துள்ளார்.

8(4). மேலும் பார்வை மகஜர் மற்றும் கைப்பற்றுதல் மகஜர் சாட்சியாக அ.சா.3 விசாரிக்கப்பட்டுள்ளார். அ.சா.3 தனது சாட்சியத்தில் வழக்கு சம்பந்தமாக தனக்கு எதுவும் தெரியாது என்றும், தன்னிடம் காட்டப்படும் பார்வை மகஜர் மற்றும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள கையொப்பங்கள் தன்னுடையது என்றும், மேற்படி கையொப்பங்களை எங்கு, எதற்காக வைத்து செய்தேன் என்று தெரியவில்லை என்றும், பின்னிட்டு போலீசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும் அரசு தரப்பு வழக்கிற்கு முற்றிலும் பாதகமாக சாட்சியளித்துள்ளார்.

8(5). மேலும் அ.சா.1 முதல் அ.சா.3 வரையான சாட்சிகளை அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட போதிலும் அது அரசு தரப்பு வழக்கிற்கு சாதகமாக இல்லை.

8(6). மேலும், இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரிக்கு பதிலாக விசாரிக்கப்பட்ட கூடுதல் சாட்சி அ.சா.4 தனது சாட்சியத்தில் அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக சாட்சியளித்துள்ளார். அ.சா.4 மூலமாக புகார் வாக்குமூலம், முதல் தகவல் அறிக்கை, பார்வை மகஜர், மாதிரி வரைபடம், கைப்பற்றுதல் மகஜர் , விபத்து பதிவேடு மற்றும் காயச்சான்று ஆகியவை முறையே அ.சா.ஆ.2 முதல் அ.சா.ஆ.10-ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. இருப்பினும் அ.சா.4-னின் சாட்சியத்தின் மூலம் வழக்கு சம்பவத்திற்கு பின்பு ஏற்பட்ட நிகழ்வுகளை ஊர்ஜிதம் செய்ய இயலுமே தவிர, வழக்கு சம்பவம் எவ்வாறு நடைபெற்றது என்பதை நிரூபிக்கும் வகையில் அவருடைய சாட்சியம் அமையவில்லை. சம்பவத்தில் பாதிக்கப்பட்ட சாட்சியான அ.சா.1, சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சியான அ.சா.2 மற்றும் பார்வை மகஜர் மற்றும் கைப்பற்றுதல் மகஜர் சாட்சியான அ.சா.3 ஆகியோர் பிறழ் சாட்சியாகியுள்ளதால் அ.சா.4-ன் சாட்சியத்தினை மட்டும் வைத்து எதிரி குற்றம் புரிந்துள்ளார் என்று முடிவுக்கு வர இயலாது.

9. எனவே மேற்படி பொருண்மைகளை வைத்து பார்க்கையில், எதிரிக்கு எதிராக சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவுக்கு வருகிறது. இறுதியாக எதிரிக்கு எதிரான இ.த.ச. பிரிவுகள் 294(b),324,506(ii)-ன் கீழான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் நிரூபிக்கப்படவில்லை என்பதால், எதிரியை குற்றவாளி இல்லை என

இந்நீதிமன்றம் முடிவு செய்து, எதிரியை பிரிவு 248(1) கு.வி.மு.ச.வின் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கின்றது.

10. இவ்வழக்கில் எதிரி மற்றும் எதிரியின் ஜாமின்தாரர்கள் எழுதிக் கொடுத்த பிணை ஆவணங்களை மேல் முறையீட்டு காலத்திற்கு பிறகு ரத்து செய்ய உத்தரவிடப்படுகின்றது. இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட தடயப்பொருளை மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு அழிக்க உத்தரவிடப்படுகின்றது.

இத்தீர்ப்புரை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு பிறகு என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, இன்று 2026 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 11 ஆம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

(ஒப்பம்.....G.சுதா, B.Sc., B.L.,)
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நடுவர், வேதாரண்யம்.

**<u>இணைப்பு :</u>**

**<u>அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள் :</u>**

அ.சா.1. : திரு. செந்தில்குமரன் (நிகழ்நிலை புகார்தாரர்)

அ.சா.2. : திருமதி. நதியா

அ.சா.3. : திரு. சுப்பிரமணியன்

அ.சா.4.: திரு. ராஜா, காவல் உதவி ஆய்வாளர், தலைஞாயிறு

**<u>அரசு தரப்பில் குறியீடுசெய்யப்பட்ட சான்றாவணங்கள் :</u>**

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | 15.01.2024 | புகார் வாக்குமூலத்தில் உள்ள அ.சா.1 னின் கையொப்பம் |
| அ.சா.ஆ.2 | 15.01.2024 | பார்வை மகஜரில் உள்ள அ.சா.3 னின் கையொப்பம் |
| அ.சா.ஆ.3 | 15.01.2024 | கைப்பற்றுதல் மகஜரில் உள்ள அ.சா.1 னின் கையொப்பம் |
| அ.சா.ஆ.4 | 15.01.2024 | புகார் வாக்குமூலம் |
| அ.சா.ஆ.5 | 15.01.2024 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.6 | 15.01.2024 | பார்வை மகஜர் |
| அ.சா.ஆ.7 | 15.01.2024 | மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.8 | 15.01.2024 | கைப்பற்றுதல் மகஜர் |
| அ.சா.ஆ.9 | 15.01.2024 | விபத்து பதிவேடு |
| அ.சா.ஆ.10 | 10.02.2024 | காயச்சான்று |

**<u>அரசு தரப்பில் குறியீடுசெய்யப்பட்ட சான்று பொருள் : இல்லை.</u>**

**<u>எதிரி தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள், சான்று பொருட்கள் : இல்லை.</u>**

(ஒப்பம்.....G.சுதா, B.Sc., B.L.,)
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நடுவர், வேதாரண்யம்.

**நகல் - மாண்புமிகு தலைமை நீதித்துறை நடுவர், நாகப்பட்டினம் அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.**

1. இந்த தீர்ப்புரையின் முடிவு காவல்துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.

2. இந்த வழக்கில் எந்த சாட்சியும் விசாரணைக்காக 3 நாட்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.

3. இந்த வழக்கின் எதிரி  வழக்கு விசாரணையின் போது பிணையில் இருந்தார்.

4. இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட தடயப்பொருளை மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு அழிக்க உத்தரவிடப்படுகின்றது.